செ.வெ.எண்:06/ஜனவரி நாள்:04.01.2016

# செய்திக்குறிப்பு

**தலைவர், மருத்துவப்பணியாளர் தேர்வு வாரியம், சென்னை** அவர்களால் அறிவிக்கப்பட்ட **சித்தா மருந்தாளுநர்** பணிக்காலியிடத்திற்கு சென்னை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, இயக்ககத்தால் மாநில பதிவு மூப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்ட பதிவு மூப்பு மற்றும் தகுதியுடைய பதிவுதாரர்கள் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பரிந்துரை செய்யப்பட உள்ளனர்.

**கல்வித்தகுதி : மேல்நிலை கல்வித்தகுதியுடன் (HSC) மருந்தாளுநர் (சித்தா) பட்டயப்படிப்பு சான்றிதழ் பெற்று பதிவு செய்திருக்க வேண்டும்.**

**வயதுவரம்பு :** 01.07.2015 அன்று அனைத்து பிரிவினருக்கும் 18 முதல் 57 வரை
பொது போட்டியாளர் 18 முதல் 40 வரை

**<u>உத்தேச பதிவு மூப்பு:</u>**

**முன்னுரிமை உள்ளவர்கள் அனைத்து வகுப்பினரும் (மாற்றுத்திறனாளிகள் உட்பட) : 28.12.2015 வரை**

**முன்னுரிமையற்றவர்கள்:**

| | |
|---|---|
| ஆதிதிராவிடர் வகுப்பினர் | : 06.11.2013 வரை |
| பழங்குடியினர் | : 13.05.2015 வரை |
| அனைத்துப்பிரிவினர் | : 25.10.2013 வரை |

மேற்கண்ட தகுதிகள் உடைய பதிவுதாரர்கள் **சித்தா மருந்தாளுநர்** பணிக்கு பரிந்துரை செய்யப்பட உள்ளதால் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தங்களது வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டை மற்றும் தங்களது அனைத்து அசல் சான்றிதழ்களுடன் **உடன்** நேரில் வருகை புரிந்து பரிந்துரைக்கப்படவுள்ள பட்டியலில் தங்களது பெயர் இடம் பெற்றுள்ளதா என்பதனை உறுதி செய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**